ResearchGate

See discussions, stats, and author profiles for this publication at: https://www.researchgate.net/publication/322223728

# □□□□□□□□□ □□□□□□□□□□□□□□ □□□□□ □□□□□□□ □□□□□□□□ □□□□□□□□□ □□□□□□□□□□ □□□□□□□□□□ □□□□□□□□ □□□□□□ □□□□□□□□□ □□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□ (Muslim Women Involvement in the Social W….

Conference Paper · January 2018

CITATIONS
0

READS
88

3 authors, including:

Jazeel M.I.M.
South Eastern University of Sri Lanka

40 PUBLICATIONS 11 CITATIONS

SEE PROFILE

Some of the authors of this publication are also working on these related projects:

Project 7th International Symposium 2017 (IntSym2017)- SEUSL - 07th & 08th December 2017 View project

All content following this page was uploaded by Jazeel M.I.M. on 03 January 2018.

The user has requested enhancement of the downloaded file.

# உளஹிடுவல பிரதேசத்தில் சமூக சேவைப் பணியில் முஸ்லிம் பெண்களின் ஈடுபாடும் அவர்கள் மீதான இஸ்லாமிய இயக்கங்களின் செல்வாக்கும்

**எம்.ஐ.எம். ஜெஸீல்[1], எம்.ஏ.ஆர். அஸ்கியா, எஸ்.எம்.எப். நுஸ்கியா[2]**

[1]இஸ்லாமிய கற்கைகள் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
[2] மாணவர்கள், இஸ்லாமிய கற்கைகள், அறபு மொழிப் பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
*jazeelmi@seu.ac.lk , arfaskiya@gmail.com , nuskiyanawfer@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*சமூகப் பணியும் அதில் முஸ்லிமின் ஈடுபாடும் இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இன்று இப்பணியில் முஸ்லிம் பெண்களின் ஈடுபாடும், ஆர்வமும் அதிகரித்து வருகின்றது. இந்த வகையில் இக்கற்கை மள்வானை உளஹிடுவல பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களின் சமூக சேவை ஈடுபாட்டை கண்டறிதலையும் இவ்வீடுபாட்டுக்கான அவர்கள் மீதான இஸ்லாமிய இயக்கங்களின் செல்வாக்கினை பரிலீத்தலையும் பிரதான குறிக்கோளாக கொண்டுள்ளது. பண்பு ரீதியான இக்கற்கை, உளஹிடுவல பிரதேசத்தில் குறிக்கோள் மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சமூக சேவைப் பணிகளில் ஈடுபடும் 45 முஸ்லிம் பெண்களிடமிருந்து நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு அடிப்படையிலானது. இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம். சாதாரன கல்வித் தகைமையையுடைய குடும்பப் பெண்களான இவர்கள் இப்பிரதேசத்தில் கல்வி, சமயம், பொருளாதாரம் ஆகிய துறைகளின் மேம்பாட்டிற்கு பங்காற்றுகின்றனர். இஸ்லாத்தின் போதனைகளே அவர்களின் சமூக சேவை ஆர்வத்திற்கான பிரதான தூண்டல்களாகும். இஸ்லாமிய இயக்கங்கள் இப்பெண்களின் ஈடுபாட்டிற்கான ஆதரவு, அனுசரனை என்பவற்றை வழங்குகின்றன. மேலும் இப்பெண்களில் அனேகர் ஒன்றில் இஸ்லாமிய இயக்கங்களின் தீவிர ஆதரவாளர்கள் அல்லது அவற்றின் உறுப்பினர்களாக காணப்படுகினறனர்.*

**திறவுச் சொற்கள்:** உளஹிடுவல முஸ்லிம், இஸ்லாத்தில் சமூக சேவைகள், இஸ்லாமிய இயக்கங்கள், சமூகப்பணியில் பெண்கள்

## 1. ஆய்வுப் பின்னனி

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழி காட்டும் வாழ்க்கை வழி. இந்த வகையில் சமூகப் பணி பற்றிய இஸ்லாமிய எண்ணக்கரு இஸ்லாமிய மூல ஆவனங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அல்குர்ஆனும், அல்ஹதீஸும் சமூக சேவை ஈடுபாட்டினை இஸ்லாத்தின் மூலத்துவ நம்பிக்கைக் கோட்பாட்டோடும் இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கை கோட்பாட்டோடும் இணைத்துப் பேசி பிரதானப்படுத்துகின்றது. சமூகத்தில் உள்ள தேவையுடையோர், அநாதைகள், ஆதரவற்றோர் போன்றோர் மீதான முஸ்லிமின் கரிசனை வேண்டப்பட்ட ஒன்றாகும்(Crabtree, Husain, & Spalek, 2016; Dusuki, 2008; 1985 ,غرايبة). இதன் விளைவாக இஸ்லாமிய வரலாற்றின் நெடுகிலும் சமூகத்தின் இப்பிரிவினர்கள் பராமரிப்பதற்கான தனிப்பட்ட நிருவன ரீதியான ஏற்பாடுகள் காணப்பட்டுள்ளது(Dusuki, 2008; Latief, 2012). இஸ்லாமிய இயக்கங்கள் சமூக சேவைப் பிரிவை உள்ளடக்கி செயலாற்றி வருகின்றன(Clark, 2004; Latief, 2012; 2013 ,القرشي & ,نعمان ,أنعم). இதற்கமைய



ISBN 978-955-627-120-1

முஸ்லிம் பெண்கள் சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றமை காணக்கூடியதாக உள்ளது. தனிப்பட்ட ரீதியிலும், பெண் இயக்கமாகவும் அப்பணி பரினமித்துள்ளது(Jassim, 2003; فايزة). சமூச சேவை, மனிதாபிமான பணி தொடர்பான இஸ்லாத்தின் போதனைகள் முஸ்லிம்களையும் முஸ்லிம் பெண்களையும் பெரிதும் ஊக்கப்படுத்தி உள்ளது(Barise, 2005 Crabtree, 2016; كتانة, عقلةالإبراهيم, & الجلادفايزة ;). இலங்கையில் முஸ்லிம் பெண்களின் சமூகப் பணி செயற்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக இலங்கையின் அல்முஸ்லிமாத் அமைப்பு, ஜமாத் இஸ்லாமியின் பெண்கள் பிரிவு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கம்பஹா மாவட்டம் பியகமத் தொகுதியில் அமைந்துள்ள உளஹிடுவல, முஸ்லிம்கள் செறிந்து வாழும் மள்வானையின் ஒரு பகுதிப் பிரதேசமாகும். அன்மைக் காலமாக இப்பிரதேசத்தில் இஸ்லாமிய எழுச்சி மேலோங்கி இஸ்லாமிய இயக்கங்களின் செயற்பாடு அதிகரித்துள்ளது. இவைகளின் துணையுடன் இஸ்லாமிய நிருவனங்களான பள்ளிவாயில்கள், மத்ரஸாக்கள் போன்றன நிருவப்பட்டுள்ளன. பிரதான த∴வா இயக்கங்களான தௌஹீத், தப்லீக், ஜமாதே இஸ்லாமி, இஹ்வான அமைப்புக்களும், தரீக்காக்களும் இப்பிரதேசத்தில் தம் பணியை மேற்கொண்டு வருகின்றன.

சுமார் 580 குடும்பங்களைக் கொண்ட இப்பிரதேசத்தில் 495 முஸ்லிம் குடும்பங்கள் பெரும்பாலும் மேற்சொன்ன இயக்கங்களை ஆதரித்தவர்களாக காணப்படுகின்றனர். இதேவேளை இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற பெண்கள் தம்மை சமூகசேவைப் பணிகளில் ஈடுபடுத்தி, சமூக முன்னேற்றத்தில் பங்காற்றுகின்ற போக்கினைக் கொண்டுள்ளனர். கல்வி, பொருளாதாரம், கலாசாரம் ஆகிய துறைகளிலும் குறிப்பாக பெண்கள் தொடர்பான மேம்பாட்டிலும் அவர்களது கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளது. எனவே இவ்வாய்வு பெண்களின் சமூகசேவைகளில் ஆர்வம் கொண்டு தம்மை ஈடுபடுத்துவதில் இங்கு இயங்கும் இஸ்லாமிய இயக்கங்கள் செல்வாக்கை செலுத்தியுள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டுகின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வு இரண்டு பிரதான நோக்கங்களைக் கொண்டதாக உள்ளது. ஒன்று சமூக சேவையில் முஸ்லிம் பெண்கள் ஈடுபாட்டை கண்டறிதல். இரண்டாவது முஸ்லிம் பெண்கள் மீதான இஸ்லாமிய இயக்கங்களின் செல்வாக்கினைப் பரிசீலித்தல்.

## 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு ஒரு பண்பு சார்பானதாகும். உளஹிடுவல பிரதேசத்தில் 495 முஸ்லிம் குடும்பங்களைச் சார்ந்த பெண்களே இவ்வாய்வின் குடித்தொகை ஆகும். குறிக்கோள் மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட இப்பிரதேசத்தில் சமூக சேவைப் பணிகளில் ஈடுபடும் 45 முஸ்லிம் பெண்களிடமிருந்து நேர்காணல் மூலம் ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டது. இவர்கள் அனைத்துத் தரப்பினைவும் கருத்திற் கொண்டதான எளுமாறு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். கல்வித் தகைமை, தொழில், இஸ்லாமிய இயக்கங்களுடனான ஈடுபாடு போன்றனவும் இத்தெரிவில் கருத்திக் கொள்ளப்பட்டன. இது தவிர



ISBN 978-955-627-120-1

சமூக சேவைகள், இஸ்லாமிய இயக்கங்களின் செயற்பாடு தொடர்பான ஆவனங்கள், பதிவுகள், குறிப்புக்கள் போன்றனவும் பெறப்பட்டு மீளாய்விற்கு உற்படுத்தப்பட்டது. நேர்காணலின் போது இப்பெண்கள் அவர்கள் ஈடுபடும் சமூக சேவைப் பகுதி, ஆர்வத்திற்கான காரணம், அவர்களது சாதனைகள், துறைசார் புலமை, அவர்கள் பெற்ற அனுசரனை, இஸ்லாமிய இயக்கத்துடனான தொடர்பு, வகிக்கும் பதவி நிலைகள் போன்றன பற்றி வினவப்பட்டனர். நேர்கானலில் பெறப்பட்ட தரவுகள் குறியீடு பகுப்பாய்வு (cooding) முறையில் வகைப்படுத்தப்பட்டு பகுப்பாயப்பட்டுள்ளது.

## 4. கலந்துரையாடலும் முடிவுகளும்

இவ்வாய்வின் நேர்காணலுக்குட்பட்ட பெண்கள் பல்வேறுபட்ட பின்னணியைக் கொண்டவர்கள். வயது ரீதியில் அனைவரும் இருபது வயதிற்கு மேட்பட்டவர்களாக காணப்பட்ட அதேவேளை விவாகமானவர்களுமாவர். கல்வித்தகைமையைப் பொறுத்தவரையில் பெரும்பாலானோர் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்தவர்கள். வெகு சிலரே பல்கலைக்கழக பட்டதாரிகள். அவர்களுள் ஓரிருவர் அரபுக் கலாபீடங்களில் மார்க்கக் கல்வியைப் பூர்த்தி செய்த மௌலவியாக்கள். இதன் விளைவாக நேர்காணலுக்கு உட்பட்ட அநேக பெண்கள் நிருவனங்களில் அரச, அரச சார்பற்ற தொழிலில் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. குடும்பத் தலைவிகளாகக் காணப்பட்ட இவர்கள் தனது ஓய்வு நேரங்களை சமூக சேவைகளில் ஈடுபட்டு கழிப்பவர்களாக காணப்படுகின்றனர். அவர்களின் தொழிலின்மையே சமூகப் பணிகளில் ஆர்வம் கொள்ளவும், ஈடுபடவும் வாய்ப்பினை வழங்கியுள்ளது எனலாம்.

உளஹிடிவல பிரதேச முஸ்லிம் பெண்கள் ஈடுபடும் சமூகப் பணித் துறைகள் கல்வி, பொருளாதாரம், சமயம், கலாசாரம் என வேறுபடுகின்றது. ஆயினும் பெரும்பாலானோர் கல்வி, சமயத் துறை சார்ந்த பணிகளிலே அதிக ஈடுபாட்டை கொண்டுள்ளனர். கல்வியும், சமயமும் ஒரு சமூக மேம்பாட்டிற்கு அவசியமான இரு பகுதி என்ற கருத்து இதற்கு வழிகோலி இருக்கலாம். மேலும் இவர்கள் பெற்ற அனுசரனை இவ்விரு துறைகளும் சார்ந்ததாகவே பெரிதும் அமைந்துவிடுகிறது. பொருளாதாரத் துறை சார்ந்த பணிகளில் இப்பெண்கள் குறைந்தளவான கவனம் செலுத்துகின்றனர். இத்துறைப் பணி நிதி ஒதுக்கீடு, வளம் போன்றவற்றை வேண்டி நிற்பதனால் மத்திய நிலையிலான இப்பெண்கள் ஈடுகொடுக்க முடியாதவர்களாக உள்ளனர் என கருத முடியும். இப்பிரதேச சூழல் அமைவு சமூக சேவைத் துறைகள் கல்வி,சமயம் சார்பானதாக அமைந்துவிடுவதற்கு மற்றொரு காரணியாகும்.

உளஹிடிவல பிரதேசம் கல்வி ரீதியான மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற ஓர் ஊர் ஆகும். மேலும் முஸ்லிம் சமூகம் பெண் கல்வியில் அக்கரையற்று இருப்பது அவ்வகைக் கல்வி வளர்ச்சியுராமல் இருப்பதற்கு வழிகோலியுள்ளது. எனவே இப்பெண்கள் இத்துறைசார் மேம்பாட்டில் ஆர்வம் கொண்டு தம்மை ஈடுபடுத்தியிருக்கலாம். அண்மைக் காலமாக பெண் கல்வி வளர்ச்சி தொடர்பான விழிப்புணர்ச்சிச் செயற்பாடு இப்பிரதேசத்தில் அதிகரித்து விட்டுள்ளது நோக்கத்தக்கது. உளஹிடிவல பிரதேசத்தில் இயங்கும் இஸ்லாமிய இயக்கங்கள் அப்பிரதேச கல்வி மேம்பாட்டில் கரிசனை கொண்டுள்ளன. இவ்வியக்கங்கள் தம் சார்பான பெண்களை ஈடுபடுத்தியுள்ளமை இத்துறையில்



ISBN 978-955-627-120-1

பெண்கள் அதிக ஈடுபாட்டை காண்பிப்பதற்கு துனை செய்துள்ளது என வாதிக்க முடியும்.

நேர்காணலுக்குட்பட்ட பெண்கள் மிகப் பெரும்பான்மையோர் கடந்த ஐந்து வருடங்களாக சமூக சேவைத் துறைகளில் ஈடுபட்டுள்ளனர். அதே வேளை கணிசமானவர்களின் சமூக சேவை ஈடுபாட்டு அனுபவம் ஆறு முதல் பத்து வருடங்களாகும். இப்பெண்கள் சமூக சேவைத் துறைகளில் ஆர்வமும், ஈடுபாடும் கொள்வதற்கான தூண்டல்களை இஸ்லாத்திடம் இருந்தே பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். அல்குர்ஆன் வாசகம், நபிமொழியின் கருத்துக்கள் அவை தரும் இஸ்லாமியப் போதனைகள் இப்பெண்களை அதிகளவில் ஊக்கப்படுத்தியுள்ளது. எடுத்துக்காட்டாக

> *"கிழக்கு மேற்கு ஆகியவற்றின் பக்கமாக உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது (மட்டும்) நன்மை (செய்ததாக ஆகிவிடுவது) இல்லை; எனினும் நன்மையுடையவர், (எவரெனில் உங்களில்) எவர் அல்லாஹ்வையும் இறுதி நாளையும், மலக்குகளையும், வேதத்தையும், நபிமார்களையும் விசுவாசித்து மேலும் செல்வத்தை தம் விருப்பத்தின் மீது பந்துகளுக்கும் அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்பவர்களுக்கும், அடிமைகளிலும் (அவர்களை விடுவிப்பதற்காக) கொடுத்தவரும் மேழும் தொழுகையை நிறைவேற்றி ஸகாத்தையும் கொடுத்து, வாக்களித்தால் தங்களின் வாக்குறிதியை (சரிவர) நிறைவேற்றக்கூடியவர்களும் (வறுமையின் போது) துன்பத்திலும் (நோய் நொடிகள் போன்ற) கஷ்டத்திலும், யுத்த நேரத்திலும் பொறுமையுடனிருந்தவர்களுமாவர். அத்தகையோர் தாம் உண்மை சொன்னார்களே அவர்கள் (அவர்) இன்னும் இவர்கள் தாம் பயபத்தியாளர்கள்." (அல்குர்ஆன்: 2:177)*

மேலும் நபிமொழிக் கருத்துகளுக்கு எடுத்துக்காட்டாக "படைப்புக்கள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பம். அப்படைப்புகளுக்கு நலவு செய்பவனே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவன்" என்ற நபிமொழியைக் (தபரானீ, 10/86) குறிப்பிடலாம். ஸதகா ஜாரியா எனும் நிலையான தர்மம், அநாதைகளின் பராமரிப்பு பற்றியதான அல்குர்ஆன் மற்றும் நபிமொழிகள், ஏழை அநாதைகளுக்கான உதவிக்கரம் நீட்டுவது பற்றிய இஸ்லாமிய சிந்தனைகள் சமூக சேவைகளின் பால் ஈர்க்கப்படுவதற்கு இப்பெண்களை உத்வேகப்படுத்தியுள்ளது. மேலும் இப்பெண்கள் இப்பணியில் ஈடுபடுவது தம்மீதுள்ளதான பொறுப்பு என்ற கருத்தையும் கொண்டுள்ளனர். "நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகள். உங்கள் பொறுப்பு பற்றி மறுமைளில் விசாரிக்கப்படுவீர்கள்." என்ற ஹதீஸை (புகாரி, 4828/5200) ஆதாரம் கொள்கின்றனர். ஒரு முஸ்லிம் என்ற வகைளில் மறுமையில் வெற்றியே உன்னதமானது எனக் கருதும் இவர்கள் அதனைப் பெறுவதற்கான பயனுள்ள கைங்கரியமாக சமூகப் பணியைக் காண்கின்றனர்.

ஏலவே குறிப்பிட்டது போல, நேர்முகம் காணப்பட்ட பெண்களில் அனேகர் உயர் கல்விக் கற்ற பட்டதாரிகள் அல்லர். எனவே அவர்கள் இஸ்லாமியக் கருத்துக்கள் சிந்தனைகளை பாரம்பரிய வழிமுறைகளினூடாகவே பெற்றுள்ளனர். பெரும்பாலானோர் தாம் செவியுற்ற பயான் நிகழ்ச்சியின்



ISBN 978-955-627-120-1

ஊடாகவே மேற்சொன்ன கருத்துக்களை உள்வாங்கி சமூகப் பணியில் ஆர்வம் கொண்டுள்ளனர். இருந்த போதிலும் இஸ்லாமிய நூல்கள், மாதாந்த வாராந்த சஞ்சிகைகள், வானொலி முஸ்லிம் அலைவரிசை நிகழ்ச்சிகள் போன்றவையும் இப்பெண்களிடம் சமூக சேவை தொடர்பான இஸ்லாமியக் கருத்துக்கள் சென்றடைய வழி செய்துள்ளது. அண்மைக் காலமாக சமூக வலைதளங்கள் இக்கருத்துக்களை உருவாக்கவும், பரவலாக்கவும் ஏதுவான ஊடகமாக அமைந்து வருகின்றது. இஸ்லாமிய த.்.வா இயக்கங்கள் பயான் நிகழ்வுகளினுடாகவே தமது போதனையை முன்னெடுக்கின்றது. இந்த வகையில் பயான் நிகழ்வுகளினுடான போதனைகள் இப்பெண்களைச் சென்றடைவது சாதாரணமானது எனக் கொள்ள முடியும். அதுமட்டுமன்றி இப்பெண்களில் பெரும்பான்மையோர் இஸ்லாமிய இயக்கம் சார்பானவர்களாக உள்ளனர்.

உளகிடிவல பிரதேசத்தின் சமூகத்துறையில் ஈடுபடும் பெண்கள் இப் பிரதேசத்தில் இயங்கும் இஸ்லாமிய அமைப்புக்கலான தொளஹீத், ஜமாத் இஸ்லாமி, தப்லீக் ஜமாத், இஹ்வான், தரீக்கா ஆகியவற்றிலொன்றிற்கு ஆதரவானவர்கள். அவர்களில் பலர் அவ்அமைப்புக்களுள் ஒன்றின் அங்கத்தவர். ஓப்பீட்டு ரீதியில் இப்பெண்களில் பெரும்பான்மையானோர் தௌஹீத் ஜமாத் அமைப்பை சார்ந்தவர்கள். சிலர் இஹ்வானுல் முஸ்லிமீன், தரீக்கா போன்ற அமைப்புக்களைச் சார்ந்துள்ளனர். இவ்வாறே தப்லீக் ஜமாத் சார்பான ஒரு சில பெண்களும் உண்டு. இந்த இஸ்லாமிய இயக்கங்கள் இப்பெண்களை சமூக சேவையில் ஈடுபடுவதற்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது எனக் கருத முடியும். இவர்களின் பொதுச் சேவைத்துறைகளில் அனுசரனையை இவ்வியக்கங்களே வழங்கியும் வருவது குறிப்பிடத்தக்கது. மேற்சொன்ன இயக்கங்களுள் தௌஹீத்ஜமாத் மிகுந்த செல்வாக்கினை பெற்ற ஒன்றாக காணப்படுகிறது.இவ் ஜமாத்தின் காரியாலயம், பள்ளிவாசல், மகளிர் அரபுக் கலாபீடம் என்பன இப் பிரதேசத்தில் இயங்குவது பெண்களுடைய செல்வாக்கினை அதிகரிக்க வாய்ப்பளித்துள்ளது. மேற்குறித்த நிறுவனங்களே பெண்களின் சமூக சேவை தொடர்பிற்கு ஆதாரமாகவும், வசதியாகவம் அமைந்துள்ளது. இதேவேளை இப்பெண்களில் பலர் இஸ்லாமிய அமைப்பக்களின் பதவி நிலையைப் பெற்றவர்கள். அவர்களுள் ஒருவர் இயக்கமொன்றின் பெண்கள் பிரிவின் செயலாளராகவும் பதவி பெற்றிருக்க பலர் இஸ்லாமிய இயக்கங்களின் உறுப்புரிமைகளைப் பெற்றும் காணப்படுகின்றனர். த.்.வாப்பணியை முன்னெடுப்பதற்கான வழிமுறைகளில் ஒன்றாக சமூக விருத்திப் பணி அமைந்து விடுகின்றது. இதன் காரணமாக இவ்வியக்கங்கள் பெண்களை இப்பணியில் ஈடுபடுத்துவது இயல்பானதே.

உளகிடிவல பிரதேசம் பெண்களின் சமூக சேவைப் பணியினால் சமூக முன்னேற்றங்களையும் மேம்பாட்டையும் பெற்று வருகின்றது. அண்மைக்கலமாக கல்வி ரீதியில் குறிப்பாக இஸ்லாமிய கல்வித் துறையில் பெண்கள் முன்றேறம் அடைந்துள்ளனர். சமூக சீர்கேடுகள் குறைவடைந்து சமூக ஒழுங்கமைப்புக்களை நிலைநாட்டப்படுவதற்கும் குறிப்பாக குடும்ப வாழ்வு சுபீட்சமானதாவதற்கும் இவர்களின் பணி உதவியுள்ளது எனலாம். இஸ்லாமிய த.்.வாவும் திட்டமிடல், காலத்தேவையை கருத்திற் கொள்ளுதல், சமூக நல்லிணக்கத்தை நோக்காக் கொள்ளுதல், வறுமையை ஒழித்தல் போன்றவற்றிற்கு சார்பானதாக அமைந்துள்ளது. பொதுவாக பெண்களின்



ISBN 978-955-627-120-1

ஆர்வம், ஈடுபாடு, ஒத்துழைப்பு என்பன உளகிடிவலப் பிரதேசத்தை வளப்படுத்தியுள்ளது என்று கொள்ள முடியும்.

சமூகச்சேவையித் துறையிகளில் ஈடுபடும் இப்பெண்கள் த∴வா முன்னெடுப்பக்களையும் மேற்கொண்டவர்கள். நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் அரைவாசிக்கும் அதிகமானனோர் த∴வாப் பணியில் நேரடியான செயற்பாட்டினை கொண்டுள்ளனர். இஸ்லாமிய வகுப்பு, பயான் நிகழ்ச்சியினை நடாத்துபவர்களாகவும் சிலர் காணப்பட மற்றும் சிலர் இந்நிகழ்வுகளின் ஒருங்கினைப்பாளர்களாகவும், ஏற்பாட்டாளர்களாகவும் பங்காற்றுகின்றனர். இவ் இயக்கங்கள் இப்பிரதேசத்தில் தமது த∴வாப் பணியை முன்னெடுப்பதற்கு இப்பெண்களின் பக்கபலம் பெரிதும் வேண்டப்பட்ட ஒன்றாக அமையப்பெற்றுள்ளது. ஆயினும் தப்லீக் ஜமாத், தரீக்கா போன்ற பெண்கள் த∴வாவில் அதிகம் ஆர்வம் கொள்ளாததனால் அவ்வியக்கம் சார்பான பெண்களின் பொதுத் துறைச் செயற்பாடும் த∴வாப் பணியும் ஒப்பீட்டு அளவில் குறிப்பிடத்தக்கதாக இல்லை என்பது இயல்பானதே.

## 5. முடிவுரை

உளகிடிவல முஸ்லிம் பெண்கள் சமூக சேவை ஈடுபாட்டினை கல்வி சமயம் பொருளாதாரம் ஆகிய துறைகளில் கொண்டுள்ளனர். சதாரண கல்வித் தகைமையுடைய குடும்ப பெண்களான அவர்கள் இத்துறையில் ஆர்வம் கொள்ளவும் ஈடுபடவும் இஸ்லாமிய போதனைகள், கருத்துக்கள் என்பன துண்டுதல்களை வழங்கியுள்ளது. பாரம்பலிய வழிகளினுடாக சிந்தனை தாக்கத்திற்குட்பட்ட இப்பெண்களின் சமூகப்பணிக்கு இஸ்லாமிய இயக்கங்கள் உத்வேகத்தையும் அனுசரனையையும் வழங்கியுள்ளது. அவ்வியக்கங்களின் ஆதரவாளர்களாக ஓரளவு பதவி நிலையுடையவர்களாக இப்பெண்கள் தமது சமூக சேவைப் பணிகளினுடாக த∴வா செயற்பாட்டினை முன்னெடுக்க முனைகின்றனர்.

## உசாத்துணைகள்

Barise, A. (2005). Social work with Muslims: Insights from the teachings of Islam. *Critical Social Work, 6*(2), 114-132.

Clark, J. A. (2004). *Islam, charity, and activism: Middle-class networks and social welfare in Egypt, Jordan, and Yemen*: Indiana University Press.

Crabtree, S. A. (2016). *Islam and social work: Debating values, transforming practice*. Bristol: Policy Press.

Crabtree, S. A., Husain, F., & Spalek, B. (2016). *Islam and Social Work: Culturally Sensitive Practice in a Diverse World*: Policy Press.

Dusuki, A. W. (2008). What does Islam say about corporate social responsibility. *Review of Islamic Economics, 12*(1), 5-28.

Jassim, L. S. (2003). الرعاية والخدمات الاجتماعية في عصر النبوة ودور المرأة المسلمة فيها: Anwar Dajlah Contemporary Artistic Printing.



ISBN 978-955-627-120-1

Latief, H. (2012). *Islamic charities and social activism: welfare, Dakwah and politics in Indonesia.* Utrecht University.

أنعم, نعمان, س. ب. غ. ع. ا., & القـرشي, م.-أ. م. أ. م. (2013). الجهود الاجتماعية للجمعيات الخيرية في الإسلام: المملكة العربية السعودية نموذجًا. جامعة السودان للعلوم والتكنولوجيا .

غباري, م. س. م. (1985). المدخل إلى الخدمة الاجتماعية الاسلامية .

فايزة, ا. الجمعيات النسوية والقيم التربوية والدينية .Université de Ghardaia .

كتانة, م. أ. أ., عقلةالإبراهيم, م., & الجلاد, م .ز. التربية الإسلامية و دورها في بناء السلوك الاجتماعي .



ISBN 978-955-627-120-1

View publication stats